www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V8SS

விருதுநகர் மாவட்டம்
முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

-----

வகுப்பு 8

காலம்: 1.30 மணி சமூக அறிவியல் மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 5×1=5**

1) 1453 ஆம் ஆண்டு கான்ஸ்டான்டிநோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?
அ) பிரான்ஸ் ஆ) துருக்கி இ) நெதர்லாந்து ஈ) பிரிட்டன்

2) பாண்டிச்சேரி உடன்படிக்கையின்படி .............. கர்நாடக போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.
அ) முதல் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) ஏதுமில்லை

3) மண்ணின் முக்கிய கூறு
அ) பாறைகள் ஆ) கனிமங்கள் இ) நீர் ஈ) இவை அனைத்தும்

4) .............. என்ற கருவி ஈரப்பதத்தை அளக்கப் பயன்படுகிறது.
அ) காற்றுமானி ஆ) அழுத்தமானி இ) ஈரநிலைமானி ஈ) வெப்பமானி

5) ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்?
அ) குடியரசுத்தலைவர் ஆ) துணை குடியரசுத் தலைவர்
இ) பிரதம மந்திரி ஈ) முதலமைச்சர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக: 5×1=5**

1) இந்தியாவின் தேசிய ஆவணக் காப்பகம் ..............ல் அமைந்துள்ளது.
2) சம்ரான் விவசாயச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ..............
3) உருமாறிய பாறைகளின் ஒரு வகையான .............. பாறை தாஜ்மகால் கட்ட பயன்படுத்தப்பட்டது.
4) சம அளவுள்ள வெப்பநிலையை இணைக்கும் கற்பனைக்கோடு ..............
5) சிராஜ்உத்-தௌலாவின் தலைமை படைத்தளபதி ..............

**III. பொருத்துக: 5×1=5**

| | | |
|---|---|---|
| 1) சென்னை | - | அடியாழப் பாறைகள் |
| 2) பாரீஸ் உடன்படிக்கை | - | பெயரளவுத் தலைவர் |
| 3) சந்தால் கலகம் | - | செயின்ட் ஜார்ஜ் கோட்டை |
| 4) கிரானைட் | - | மூன்றாம் கர்நாடகப் போர் |
| 5) ஆளுநர் | - | முதல் விவசாயிகள் புரட்சி |

**IV. சுருக்கமான விடையளி: (ஏதேனும் 10) 10×2=20**

1) ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறுகுறிப்பு வரைக.
2) இருட்டறை துயரச் சம்பவம் பற்றி குறிப்பு வரைக.
3) சம்ரான் சத்தியாகிரகத்தில் மகாத்மா காந்தியின் பங்கினைக் கூறு.
4) இரயத்துவாரி முறையின் சிறப்புக் கூறுகள் யாவை?
5) ‘மண்வளப் பாதுகாப்பு’ என்றால் என்ன?
6) வளிமண்டலக் காற்றழுத்தம் என்றால் என்ன?
7) பனி உருவாக்கம் எவ்வாறு நடைபெறுகிறது?
8) ‘வெயிற் காய்வு’ என்றால் என்ன?
9) மாநில சட்டமன்ற பேரவை உறுப்பினராவதற்கு உள்ள தகுதி யாவை?
10) நற்குடிமகனின் மூன்று பண்புகள் யாவை?
11) இந்திய குடிமகனாவதற்குரிய 5 வழிமுறைகளை எழுதுக.

**V. விரிவான விடையளி: (ஏதேனும் 3) 3×5=15**

1) நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.
2) காற்றையும் அதன் வகைகளைப் பற்றியும் விவரி.
3) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
4) மழைப்பொழிவின் பல வகைகளை விவரி.

---------

Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com